

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நவம்பர் 27 அன்று பொள்ளாச்சி மற்றும் சுற்று பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பிறந்த 50 குழந்தைகளுக்கு கழக மாநில நெசவாளர் அணிச் செயலாளர் கே.எம்.நாகராஜன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தங்க மோதிரம் அணிவிக்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், சியாமளா நவநீதகிருஷ்ணன், நவநீதகிருஷ்ணன், அய்யம்பாளையம் ராசு, சேர்வகாரன் பாளையம் ரமேஷ், கௌதமன், தர்மராஜ், கே.வி.கே.எஸ்.சபரிகார்த்திகேயன், மு.க.முத்து, அமுதபாரதி, ரகு (எ) துரைராஜ், ஆச்சிபட்டி பாலகிருஷ்ணன், ஆனைமலை சாந்தலிங்கம், குணசேகரன், ரகுபதி, காளிமுத்து, ஜெயக்குமார், மருத்துவர் செந்தில்குமார் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணியினர் பொதுமக்கள் என அனைவரும் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

### கனமழை எச்சரிக்கை : அரசு நிர்வாகத்துடன் இணைந்து

# கழக அனைத்து நிர்வாகிகளும் நிவாரணப் பணிகள் மேற்கொள்வீர்!

### அமைச்சர்கள் - நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் - உள்ளாட்சிப் பிரதிநிதிகள் - கழக நிர்வாகிகளுக்கு

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, டிச.3-

கனமழை எதிரொலி: அமைச்சர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகி களுக்கும் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோள் வருமாறு :-

இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் டிசம்பர் 2ஆம் தேதி முதல் டிசம்பர் 4 ஆம் தேதி வரை பல மாவட்டங்களில் மழை / கனமழை பெய்யும் என எச்சரிக்கை வெளியிட்டிருப்பதால் அரசு நிர்வாகம் முழுவீச்சில் முடுக்கி விடப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

அரசு அதிகாரிகளின் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அமைச்சர்கள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக அமைப்புகளில் உள்ள அனைத்து நிர்வாகிகள் தத்தமது பகுதிகளில் இருந்து மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை செய்திட உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மக்களுக்கான உணவு, உடை, மருத்துவ வசதி உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கு உதவிடும் வகையில் அரசு அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் தேவையான உதவிகளையும் செய்து ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

### இளைஞர் அணிச் செயல்வீரர்கள் கூட்டம்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு

# திருப்பூர் மாவட்டக் கழகங்கள் சார்பில் உற்சாக வரவேற்பு!

### கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர்கள் செல்வராஜ் எம்.எல்.ஏ. - இல.பத்மநாபன் வேண்டுகோள்!





திருப்பூர், டிச. 3 -

திருப்பூர் மாவட்டம், கொடுவாய், என்.காஞ்சிபுரம், எல்லப்பாளையம் புதூர் பிரிவில் நடைபெறும் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது என திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர்கள் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மாண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தொடராக திகழ்ந்து கழகத்தையும், தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி, இந்தியாவின் நம்பர் ஒன் முதல்வராக தமிழ் நாட்டை சிறப்புடன் வழி நடத்திவரும் கழக தலைவர் அவர்கள் இளைஞர் அணி செயலாளராக இருந்து எப்படி சிறப்பாக செயல்பட்டார்களோ, அதேபோல் திராவிட நாயகன், இளைஞர்களின் எதிர்காலம், இளைஞர் அணி செயலாளர் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராகப் பொறுப் பேற்று முதன் முதலாக திருப்பூர் மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளார் என்பது நம் அனைவருக்கும் மகிழ்ச்சியான செய்தியாக அமைந்துள்ளது.


அமைச்சராகப் பொறுப் பேற்றது முதல் அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டும் அளவிற்கு தனது துறைச்சார்ந்த பணிகளை சிறப்புடன் செய்து வருவதோடு, நாட்டிலுள்ள இளைஞர்களுக்கு ஓர் வழி காட்டியாக திகழ்ந்து வருகிறார்கள். தற்போதைய அரசியல் சூழலில் நாடே எதிர்நோக்கும் இளந்தலைவராக இவரது செயல்பாடுகள் அமைந்துள்ளது நம் அனைவருக் கும் பெருமைக்குரியதாகும், இத்தகைய பெருமைக்குரிய நமது கழக இளைஞர் அணி செயலாளர் அவர்கள் திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் இன்று (03.12.2023 -ஞாயிற்றுக்கிழமை) திருப்பூர் மாவட்டம், கொடுவாய், என்.காஞ்சிபுரம், எல்லப் பாளையம் புதூர் பிரிவில் நடைபெறும் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகைதர உள்ளார்கள். அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் எனவும்,

மேலும் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், செயல் வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென வும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர்கள் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மாண்டலத்தலைவர் இல.பத்ம நாபன் ஆகியோர் தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கவிஞர் முடியரசன்**
**டிசம்பர் 3 (1998)**



**திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர்களில் ஒருவர்.**

**கழக இலக்கிய அணியின் தலைவராகப் பணியாற்றியவர்.**

**“1940க்குப் பின்னால் திராவிட இயக்கத்தின் சார்பில் நாற்பதுக்கும் மேற்பட்ட இதழ்களில் கொள்கை முழக்கம் செய்தவர். அதிலும் குறிப்பாக முரசொலியிலும் முத்தாரத்திலும் அவர் கவிதை இடம்பெறாத நாளே இருக்க முடியாது” எனத் தலைவர் கலைஞரால் நினைவு கூரப்பட்டவர்.**

**தமது மூத்த வழித்தோன்றல் இவர்தான் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகச் சார்பில் “கலைஞர் விருது” பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மாற்றுத் திறனாளிகளுக்கான நிலையான நீடித்த இலக்குகளை அடைந்திட-

# மாற்றுத் திறனாளிகளின் நலனைப் பாதுகாக்க நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 3-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று விடுத்த, சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துச் செய்தியில், “மாற்றுத் திறனாளிகளுக்கான நிலையான நீடித்த இலக்குகளை அடைந்திடவும், அவர்களின் நலனைப் பாதுகாக்கவும் நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துச் செய்தி வருமாறு:-

ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் டிசம்பர் மாதம், 3ஆம் நாள் அனைத்து நாடுகளிலும் அனுசரிக்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்கள் சுயமரியாதை யுடன் சமுதாயத்தில் இணைந்து வாழ நாம் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டிய அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

நமது அரசு, மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் முதல் நடவடிக்கையாக மாற்றுத்திறனாளிகளின் உடல் ரீதியான குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுக்கவும், சிறப்புக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வழங்கவும், மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் பிற நலத்திட்டங்களுக்காகவும் வழங்கப்படும் நிதியினை இந்த அரசு உயர்த்திக் கொண்டே வருகிறது. இதன்மூலம் மாற்றுத்திறனாளிகளின் சமூக, பொருளாதார வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

மாத பராமரிப்பு உதவித்தொகை ரூபாய்.2000/ என உயர்த்தி வழங்கியும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வாயிலாக மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கும் பல புதிய முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டும், மாற்றுத்திறனாளிகளுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

மேலும், சமுதாயத்தில் மாற்றுத்திறனாளிகள் முழு பங்கு வகிக்கும் வகையில் பொதுக் கட்டடங்களில் தடையற்ற சூழல் அமைத்தல், நவீன உதவி உபகரணங்கள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து மறுவாழ்வு உதவிகளும் மாற்றுத்திறனாளிகள் விருப்பத்திற்கு ஏற்றவாறு அவர்கள் வசிக்கும் இருப்பிடம் மற்றும் சமுதாயத்திலேயே கிடைக்கும் வகையில் கோட்ட அளவில் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அமைக்கும் பணியும் “உரிமைகள் திட்டம்” மூலம் செயல்படுத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக நமது தமிழ்நாடு அரசு, ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் உறுதி ஏற்றுள்ள, “எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும்”, “சமுதாயத்தில் ஒருவரும் விடுபடக் கூடாது” (“LEAVE NO ONE BEHIND”) போன்ற கொள்கைகளை பின்பற்றும் வகையில் செயல்பட்டு வருகிறது.

எனவே, இந்த நாளில் “மாற்றுத்திறனாளிகளுக்கான நிலையான நீடித்த இலக்குகளை அடைந்திடவும், அவர்களின் நலனைப் பாதுகாக்கவும் நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம்” என அனைவரும் ஒன்றிணைந்து உறுதி ஏற்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# நினைவைப் போற்றும் சிலைகள்!

### பேராசிரியர் சுப.வீரபாண்டியனின் ஒரு நிமிட செய்தி! (1.12.2023)







இன்று காலை சென்னை - கிண்டியில் ‘திராவிட பேரொளி’ அயோத்திதாசப் பண்டிதருக்கு சிலையும் மணி மண்டபமும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்படுகிறது.

இதுபோல சமூக சீர்திருத்த வாதிகள், இந்த நாட்டுக்காக பாடு பட்டவர்களுக்கு தொடர்ந்து சிலைகளை, மணி மண்டபங்களை அறிஞர் அண்ணா அவர்களின் காலம் தொட்டு தி.மு.கழக ஆட்சி நடத்தி வருகிறது.

1969 வது ஆண்டு சிதம்பரத்திலே சகஜானந்தா அவர்களுக்கு சிலை அமைக்கப்பட்டது. அவர் பட்டியல் இன மக்களுக்காக கல்விக்காக பாடுபட்டவர்.

1972 ஆம் ஆண்டு விடுதலைப் போராட்ட வீரர் செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. அவர்களுக்கு துறைமுகத்திலே சிலை மட்டுமல்ல அந்தத்துறைமுகத்திற்கு அவருடைய பெயரும் சூட்டப்பட்டது.

அதற்குப் பிறகு 1989 ஆம் ஆண்டு நம்முடைய கருத்துக்களுக்கு எதிராக இருந்தாலும் சத்திய மூர்த்தி அவர்களுக்கு திருமயத்திலே சிலை. 1990 லே சென்னையிலே பாபு ஜெகஜீவன் ராம் அவர்களுக்குச் சிலை, 1999-ல் வேலூரில் கிருபானந்த வாரியார் அவர்களுக்கு மணி மண்டபம், 2001-ல் உடுமலைப் பேட்டையில் உடுமலை நாராயண கவிக்கும், பிறகு குன்றக்குடியில் குன்றக்குடி அடிகளாருக்கும் மணிமண்டபம்.

எல்லாவற்றையும் தாண்டி 18 ஆண்டுகளாக மூடிக் கிடந்த திருவள்ளுவர் சிலையை பெங்களூரில் திறப்பதற்கு ஏற்பாடு செய்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

**- பேராசிரியர் சுப.வீரபாண்டியன்**



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் விதமாக வேலூர் மாவட்டம் காட்பாடி சித்தூர் பேருந்து நிலையம் வந்தபேனா வடிவிலான முத்தமிழ்த் தேரை நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மலர் தூவி, மாலை அணிவித்து வரவேற்றார். அருகில் துணை மேயர் எம்.சுனில் குமார், ஒன்றியக் குழுத் தலைவர் வேல்முருகன், துணைத் தலைவர் சரவணன், மண்டலக் குழுத் தலைவர் புஷ்பலதா, ஒன்றியக் கழகச் செயலாளர் கருணாகரன், பகுதிச் செயலாளர் வன்னியராஜா, மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் முரளி பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.